# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • ஜனவரி 30, 2021 Weekly E-paper • January 30, 2021




# பதவியேற்கும் முன்பே பொறுப்பேற்ற தலைவன்!

சுப. வீரபாண்டியன்



## தொடர்கிறது மொழிப்போர்!

ஆர்ட் நாகராஜன்

## வேளாண் சட்டம் – ரத்து செய்!

தலையங்கம்



## நிராகரிப்போம் அதிமுகவை!

நேர்காணல்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • ஜனவரி 30, 2021 Weekly E-paper • January 30, 2021


# பதவியேற்கும் முன்பே பொறுப்பேற்ற தலைவன்!

**சுப. வீரபாண்டியன்**

முன் எப்போதும் நிகழ்ந்திராத சில புது முன்னோட்டங்கள் வரலாற்றில் நிகழும்போது, பிற்காலத்தில் அவை முன்மாதிரிகள் ஆகிவிடும். அதற்குப் பின்னால் அந்நிகழ்வு பிற கட்சிகளாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாக ஆகியே தீரும்!

இப்போது அப்படி ஒரு முன்னோட்டத்தை, எதிர்காலத்தில் முன்மாதிரி ஆகக்கூடிய நிகழ்வை, மொழிப்போர் வீரர்களின் நினைவுநாளான ஜனவரி 25 அன்று, திமுக தலைவர் தளபதி நடத்திக் காட்டியுள்ளார். அந்த நிகழ்ச்சி, தலைவர் கலைஞர் என்னும் சிங்கம் வாழ்ந்த வீட்டின் முன், ஊடகவியலாளர்கள் முன்னிலையில் அரங்கேறியுள்ளது!

யார் ஒருவரும், தேர்தலில் வெற்றிபெற்றுச் சட்டமன்றத்திற்கு வந்தபிறகு, மாநில ஆளுநர் முன்னிலையில் பதவியேற்றுக் கொள்வதுதான் வழக்கம். பதவியேற்றுக் கொள்ளத்தான் ஆளுநர் வேண்டும். மக்களுக்கான பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கு, மக்கள் போதும் என்று திமுக தலைவர் கருதியிருக்கக்கூடும். அதனால்தான், மக்களிடம் செய்திகளைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் ஊடகங்களின் முன்னால் அப்பொறுப்புகளை அவர் ஏற்றுள்ளார்.

25ஆம் தேதி அறிவிப்பில், நான்கு புதுமைகள் நடந்துள்ளன.

1. தலைவர் ஸ்டாலின், பதவி ஏற்கவில்லை, பொறுப்புகளை ஏற்றிருக்கிறார்.

2. சட்டம் என்பதைப் பின்னிறுத்தி, அந்தச் சட்டம் யாருக்காக இயற்றப்படுகிறதோ, அந்த மக்களை முன்னிறுத்தியுள்ளார்.

3. கடவுள் மீதோ, மனசாட்சியின் மீதோ உறுதி ஏற்காமல், தன்னையும், இயக்கத்தையும் உருவாக்கிய அண்ணா, கலைஞர் மீது உறுதியேற்றுள்ளார்.

4. நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்று சொல்லும் தேர்தல் அறிக்கைக்கு முன்பே, மக்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு, அவற்றையும் நிறைவேற்றும் புதிய முறையைக் கொண்டு வந்துள்ளார்.

இவை நான்கும், இதற்கு முன் தமிழகத்தில் நடந்ததில்லை. புதியவைகளை உருவாக்குவதும் தலைமைப் பண்புகளில் ஒன்று என்பதை இங்கு நாம் எண்ணிப் பார்க்கலாம்.



நேற்றைய உறுதிமொழிகளை, வெறுமனே ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதுபோல் சொல்லிவிட்டுப் போய் விடாமல், ஒரு படிவத்தை உருவாக்கி, அதனை நிரப்பச் சொல்லி, அதற்கு ஓர் ஒப்புகைச் சீட்டும் (acknowledgement) வழங்கப்படுகிறது. மக்களால் நிரப்பப்பட்ட படிவங்கள் அனைத்தும், ஒவ்வொரு தொகுதியிலும், தலைவர் முன்னிலையிலேயே ஒரு பெட்டியில் வைக்கப்பட்டு, அப்பெட்டிக்கு முத்திரையும் (seal) வைக்கப்படுகிறது.

அந்தப் பெட்டிகள் எப்போது திறக்கப்படும், அந்தக் கோரிக்கைகள் எப்போது நிறைவேற்றப்படும் என்பனவும் சொல்லப்பட்டுள்ளன.

நம் கட்சி வெற்றிபெற்று, தலைவர் முதலமைச்சராகப் பதவியேற்ற மறுநாள், அந்தப் பெட்டிகள் திறக்கப்படும். அன்றிலிருந்து நூறாவது நாளுக்குள் அவை நிறைவேற்றப்படும். நிறைவேற்ற முடியாத கோரிக்கைகள் இருக்குமானால்,அவை பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்படும். ஆட்சிக்கு வந்த மூன்றே மாதங்களில், ஏறத்தாழ ஒரு கோடி மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கும்.

இந்த நடைமுறை தமிழ்நாட்டிற்கு மட்டுமில்லை, இந்தியாவிற்கே புதியது என்று சொல்ல வேண்டும், உலக அளவில் நடந்துள்ளதா என்று தேடிப் பார்க்க வேண்டும்!

இதில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன என்பது கட்சியின் தலைவருக்குத் தெரியாமல் இருக்க முடியாது. ஆட்சிக்கு வந்து 10, 15 நாள்களிலேயே, ஏதும் நிறைவேற்றப்படவில்லையென்றால், எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்கத் தொடங்கிவிடுவார்கள். ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்குள் ஏதும் நடக்கவில்லை என்றால், மக்களே கேள்வி கேட்கத் தொடங்கிவிடுவார்கள். தேவையில்லாமல், கெட்ட பெயரை ஆட்சியும், கட்சியும் சுமக்க வேண்டியிருக்கும். தேர்தல் அறிக்கையின் உறுதிமொழிகளைப் பொறுத்தமட்டில் இப்படிப்பட்ட நெருக்கடிகள் எல்லாம் இல்லை. பிறகு ஏன் நம் தலைவர் இப்படி ஒரு செயலில் இறங்கியுள்ளார்?

இரண்டே இரண்டு காரணங்கள்தாம் இருக்க முடியும். ஒன்று, தமிழக மக்களின் மீது உள்ள அக்கறை. இரண்டு, தன் உழைப்பின் மீதும், தன் கட்சியினரின் ஒத்துழைப்பின் பேரிலும் அவருக்குள்ள நம்பிக்கை!

இவையெல்லாம் மிகுந்த மகிழ்ச்சிக்குரியனவே என்றாலும், இதில் கவலை தரக்கூடிய ஒரு செய்தியும், அவர்பால் அன்பு கொண்டவர்களுக்கு

தொடர்ச்சி 3ம் பக்கம்

# தொடர்கிறது மொழிப்போர்

## ஆர்ட் நாகராஜன்

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ம் நாள் மொழிப்போர் தியாகிகளைப் போற்றும் வீரவணக்க நாளாக திராவிட முன்னேற்ற கழகத்தால் அனுசரிக்கப்படுகிறது.

1965ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் நாள் ஒன்றிய அரசின் கட்டாய இந்தி மொழித்திணிப்பைக் கண்டித்து இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் போராட்டம் தமிழகம் முழுவதும் தொடங்கியது.

தமிழகத்தில் தொடங்கிய மொழிப் போராட்டத்தில் இளைஞர்கள் பலர் தங்கள் உடலில் தீ வைத்துக் கொண்டு மாய்த்துக் கொண்டனர்.தொடர்ந்து ஐம்பத்தைந்து நாட்கள் தொடர்ந்து நடந்த இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காங்கிரஸ் அரசின் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மாணவர்களின் தீவிரமான போராட்டத்தால் இந்தி மொழித் திணிப்பை ஒன்றிய அரசு கைவிட்டது. 1938ம் ஆண்டு தந்தை பெரியாரால் தொடக்கி வைக்கப்பட்டு ஏறக்குறைய 85 ஆண்டுகளாக, பலப்பல கட்டங்களாக இன்று வரை நீடித்துக் கொண்டே வருகிறது மொழிப்போர்!

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள மொழிகளின் எண்ணிக்கை வெறும் இருபத்திரண்டு மட்டுமே! இந்த இருபத்திரண்டு மொழிகளைத்தான் ஏறத்தாழ 90 சதவீதம் பேர் பேசுகின்றனர்.

பிரிட்டிஷ் இந்தியாவில் முதன்முதலாக இந்தியா முழுக்க இந்தியைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்ட காந்தி, இந்தி மட்டுமே இந்தியாவின் தேசிய மொழியாக இருக்கவேண்டும் என்றும், இந்தியர்கள் அனைவரும் ஒரே இந்திய மொழியை பேசுவதுதான் இந்தியாவின் சுயமரியாதை ஆகும் என்றார்.

1937 பிப்ரவரியில் நடந்த இந்தியத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று 1937 ஜூலை 15 அன்று சென்னை மாகாணத்திற்கு (பிரீமியர்) முதல்வரான ராஜகோபாலாச்சாரி, 1938- 39ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் சென்னை மாகாணத்தில் நூற்றி இருபத்தைந்து உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமொழியாகப் பயிற்றுவிக்கப்படும் என்று அறிவித்து, 1938 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் நாள் சென்னை மாகாண அரசின் உத்தரவாகப் பிறப்பித்தார் அவர்.

அதனைத் தொடர்ந்து 1938 மே 15ஆம் நாள் குடிஅரசு ஏட்டில் "எச்சரிக்கை கலந்த கோரிக்கை அறிவிப்பு" என்று ஒரு தலையங்கத்தைத் தந்தை பெரியார் எழுதினார்.

1938 ஆகஸ்ட் ஒன்றாம் நாள் இந்தி எதிர்ப்பு நாள் "நடைபயணம்" அனுசரிக்கப்பட்டது திருச்சியிலிருந்து நூறு பேர் கொண்ட ஒரு பெரும்படை சென்னை நோக்கிப் புறப்பட்டது. அதில் திராவிட இயக்கத் தலைவர்கள் பட்டுக்கோட்டை அழகிரியின் தலைமையில் மூவலூர் ராமாமிர்தம் அம்மாள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மொத்தம் 42 நாட்கள் நீடித்த அந்தப் பயணம் செப்டம்பர் 11, 1937 அன்று சென்னை நகரை வந்தடைந்தது.



ஆர்ட் நாகராஜன்

சென்னை கடற்கரையில் நடைபயணப் பேரணியை வரவேற்பதற்கு மட்டும் சுமார் 70,000 பேர் திரண்டிருந்தனர். இந்தி எதிர்ப்புநாள் நடைபயணம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த பாராட்டுவிழா பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார், மறைமலை அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், நீதிக்கட்சித் தலைவர் பி.டி. ராஜன், சௌந்தரபாண்டியன், சி.என்.அண்ணாதுரைஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இதன் தொடர்ச்சியாக 1938 நவம்பர் 13ஆம் நாள் சென்னை ஒற்றைவாடை அரங்கில் பெண்கள் மாநாடு மறைமலையடிகளின் மகள் நீலாம்பிகை அவர்களின் தலைமையில் நடந்தது. இந்த மாநாட்டில் தந்தை பெரியார் சிறப்புரையாற்றி இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பெண்களை அழைத்தார்! மூவாலூர் ராமாமிர்தம் அம்மாள், டாக்டர் தர்மாம்பாள், அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள், மஞ்சுளாபாய் சண்முகம், NVN.புவனேஸ்வரி, பட்டம்மாள், சீத்தம்மாள் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த வழக்கில் சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் தந்தை பெரியார் அவர்கள் தானே வழக்காடி, சிறைத்தண்டனை பெற்றார்.

இந்தப் போராட்டத்தில் கைதான சென்னை பெரம்பூரைச் சேர்ந்த "நடராஜன்" 1939 சனவரி 15ஆம் நாள் சிறையிலேயே மரணமடைந்தார். தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தைச் சேர்ந்த "தாளமுத்து" தஞ்சைச் சிறைச்சாலையில் கொடுமைகளால் 1939 மார்ச் 12ம் நாள் மரணமடைந்தார்.

பின்னாளில் கலைஞர் ஆட்சிக்கு வந்த பின்பு மொழிப்போர் தியாகிகளான "தாளமுத்து நடராசன்" பெயரில் சென்னை எழும்பூர் தமிழ்நாடு அரசு அலுவலக மாளிகைக்கு "தாளமுத்து நடராசன் மாளிகை" என தி.மு.க. அரசு பெயர் சூட்டி மகிழ்ந்தது.

1952 ஆம் ஆண்டு மத்திய காங்கிரஸ் அரசு மீண்டும் இந்தியைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. 1952 ஜூலை 27இல் விடுதலை நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் "இந்தி நம் கழுத்துக்குச் சுருக்கு" என்ற தலைப்பில் தலையங்கம் எழுதினார்.

இதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் மாதம் ரயில் நிலையங்களில், மற்றும் பெயர்ப்பலகைகளில், உள்ள இந்தி எழுத்துகளைத் தார்பூசி அழிக்கும் போராட்டத்திற்கு அழைப்புவிடுத்தார்.

இதன் நீட்சியாக 1953 ஆகஸ்டு 14ஆம் தேதி டால்மியாபுரம் என்ற பெயரை "கல்லக்குடி" என பெயர் மாற்றம் செய்யும் போராட்டம் நடந்தது. இந்தப் போராட்டத்திற்குக் கலைஞர் கருணாநிதி தலைமை தாங்கினார். பின்னாளில் கலைஞர் கருணாநிதி முதல்வரானபின் டால்மியா புரத்தைக் கல்லக்குடி பழங்காநத்தம் என்று பெயர் மாற்றினார்.

1964ம் ஆண்டு சனவரி 25ஆம் தேதி திருச்சி ரயில் நிலையத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்து கீழப்பழுவூர் சின்னச்சாமி உடலில் தீவைத்துக் கொண்டு இந்தி ஒழிக, தமிழ் வாழ்க என்று கூறிக்கொண்டே உயிர் துறந்தார். இந்தித் திணிப்பைக் கண்டித்து நான்காம் கட்ட மொழிப்போரில் முதல்களப்பலியாக மாறியிருந்தார் சின்னச்சாமி.

1978 மார்ச் 12ஆம் தேதி இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் இந்தி அலுவல் மொழியாக்கப்படுவது அவசியமான ஒன்று என்றார்.

பின்னர் 1986இல் ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது "இந்தி வாரம்" கொண்டாடப்பட்டது. அதை எதிர்த்து 1986 நவம்பர் 17ஆம்தேதி அரசியல் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தைத் திமுக தொடங்கியது. சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட திமுக எம்எல்ஏக்கள் பேராசிரியர் அன்பழகன் உட்பட ஏழு பேரைப் பதவி நீக்கம் செய்தார் அதிமுக ஆட்சியின் சபாநாயகர் பி. எச். பாண்டியன்.

இந்தி திணிப்புக்கு எதிரான போராட்டங்கள் 1938இல் தொடங்கினாலும் 1965இல் நடந்த போராட்டம் சர்வதேச கவனத்தை ஈர்த்தது.

மொழிப்போர் என்பது இந்தி மொழியைப் பேசுகின்ற வட இந்தியர்களுக்கு எதிராகத் தமிழர்கள் தொடுத்த ஆயுதப்போர் அன்று! இந்திய அரசுக்கு எதிராகத் தமிழக மக்கள் தொடுத்த யுத்தமும் அன்று! அது எங்கள் உரிமைப்போர்! போராட்டம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வேளாண் சட்டம் – ரத்து செய்!

நாடாளுமன்றத்தில் மக்களுக்குத் தேவையான செய்திகளைப்பற்றி மட்டுமே பேசவேண்டும் என்று பிரதமர் மோடி நேற்றைய தினம் டெல்லியில் பேசியிருக்கிறார்.

இது வேதாளம் வேதம் ஓதுவதைப் போல இருக்கிறது.

நாடாளுமன்றம் என்பதே மக்களுக்கான பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்காகத்தான். நாட்டு மக்களுக்குத் தேவையானவை என்ன, அதற்கான சட்டங்களை இயற்றுவது, அது குறித்து சட்ட முன்வரைவின்போது விவாதங்களை நடத்துவது இவை போன்றவைகளை உள்ளடக்கியதுதான் நாடாளுமன்றம்.

இந்த நெறிமுறைகளை, நடைமுறைகளைப் பற்றி இன்றைய பாஜக அரசு கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை, நாடாளுமன்ற மாண்பை மதிப்பதாகவும் தெரியவில்லை.

இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகள், மத்திய அரசு கொண்டுவந்த வேளாண் சட்டத்துக்கு எதிராக, அச்சட்டத்தை அடியோடு நீக்க வேண்டும் என்று போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

டெல்லியில் பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேச விவசாயிகள் லட்சக்கணக்கானோர் கூடி அமைதியான போராட்டத்தை அறுபத்திமூன்று நாட்களுக்கு மேல் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியக் குடியரசு நாளன்று நடத்திய டிராக்டர் ஊர்வலம் மிகச்சரியாக நடைபெற்றது என்றாலும், இடையில் காவல்துறையின், கண்ணீர்ப் புகையும், தடி அடியும் வேளாண் மக்களை மத்திய அரசு எப்படி மதிக்கிறது என்பதற்குச் சாட்சியாய் அமைந்துவிட்டது.

வேளாண்சட்டத்தை மத்திய அரசு நாடாளுமன்றத்தில், இந்தச்சட்டம் "மக்களுக்குத் தேவையானதுதானா" என்று யோசித்துத்தான் கொண்டுவந்ததா? என்பதை இன்று வேதம் ஓதும் மோடி சொல்ல வேண்டும்.

நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டம் குறித்து திமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட்டுகள், திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அனைத்தும் இன்று ஒன்று சேர்ந்து இவ்வேளாண் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தன.

சட்டத்தின் தன்மையை கொஞ்சம் கூட யோசிக்காமல், எதிர்க்கட்சிகளை மதிக்காமல், ஓர் அவசர சட்டத்தின் மூலம் இவ்வேளாண் சட்டத்தை நிறைவேற்றியது மோடி அரசு. இச்சட்டத்திற்குக் கையெழுத்திட வேண்டாம் என்று திருச்சி சிவா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அனைத்தும் வலியுறுத்தியும் கூட குடியரசுத் தலைவர் கையெழுத்திட்டுவிட்டார்.

இந்த வேளாண்சட்டம் மக்களுக்குத் தேவையான சட்டம்தானா, இதனால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதைக் கொஞ்சமும் சிந்திக்காத மோடி இன்று மக்களுக்கு வேண்டியதை மன்றத்தில் பேசச்சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

முதலில் இந்த வேளாண்சட்டத்தை மோடி ரத்து செய்ய வேண்டும், புத்தி சொல்லக்கூடாது. ●

3ம் பக்கம் தொடர்ச்சி

இருக்கிறது.

கொரோனா தொடங்கிய காலத்திலிருந்து, அவரும் கட்சியினரும் ஓய்வே இன்றிப் பணியாற்றி வருகின்றனர். இப்போது தொடர்ந்து கிராம சபைகள் கூட்டம் நடைபெற்று முடிந்துள்ளது. இனிமேல், வரும் 29 ஆம் தேதியிலிருந்து, "தொகுதிதோறும் ஸ்டாலின்" என்னும் இத்திட்டம் தொடங்க உள்ளது. தேர்தல் முடியும்வரையில், உண்ணவும், உறங்கவும் நேரம் இருக்கப் போவதில்லை. ஆட்சிக்கு வந்து அமர்ந்தபின்னும் இனி அவருக்கு ஓய்வும் இருக்கப் போவதில்லை.

மக்களுக்கான இத்தனை உழைப்பையும் அவர் மனம் தாங்கலாம். உடல் தாங்க வேண்டுமே என்பதுதான் அந்தக் கவலை!

எனினும், வெறும் ஆட்சி மாற்றம் மட்டுமின்றி, ஒரு பெரிய சமூக மாற்றம் நடக்க உள்ளதே என்பதில் நம் எல்லோருக்கும் பெரு மகிழ்ச்சிதான்!

இன்றைய சூழலில், அமைச்சர்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். மக்கள் எல்லோரும் துன்பத்தில் வாடுகின்றனர். நம் ஆட்சி அமைந்த பின், அமைச்சர்கள் எல்லோரும், பதவியேற்ற நாள் தொடங்கி, மிகக் கடுமையான வேலைகளைச் சுமந்து நிற்பார்கள். மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். இதுதான் வேறுபாடு!

நம் தலைவரை எண்ணி, கட்சியின் ஒவ்வொரு தொண்டனும் இன்று பெருமைப்படலாம்! ஒவ்வொரு தமிழனும் நாளை பெருமைப்படுவான்!! ●




ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# நிராகரிப்போம் அதிமுகவை!

## ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் இரா. அதியமான் நேர்காணல்

**ஆதித்தமிழர் பேரவை தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை ஆற்றியுள்ள செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்கவையாக நீங்கள் கருதுவது என்ன?**

1994ஆம் ஆண்டு ஆதித்தமிழர் பேரவை தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை அருந்ததிய மக்கள் மத்தியில் அம்பேத்கரையும், பெரியாரையும் கொண்டுபோய்ச் சேர்த்ததுதான் பேரவையின் செயல்பாடுகளில் முக்கியமானதாகக் கருதுகிறேன். காந்தி, நேரு போன்ற தலைவர்கள்தான் அருந்ததிய மக்களிடம் அறிமுகமாகி இருந்தனர். ஆதித்தமிழர் பேரவை வந்தபிறகுதான் அம்பேத்கரும், பெரியாரும் பெரிய அளவில் அவர்களிடையே கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டனர்.

**தமிழ்நாட்டில் அதிமுக - பாஜக கூட்டணி சமூகநீதிக்கு எதிராகச் செயல்பட்டு வருகிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா ? அவ்வாறெனில் அதற்கான காரணங்களாக நீங்கள் முன்வைப்பவை என்னென்ன?**

அதிமுக - பாஜக கூட்டணி சமூக நீதிக்கு எதிரானது என்பதில் சந்தேகமில்லை. அதிமுக - பாஜக கூட்டணி என்று சொல்வதைவிட பாஜக அதிமுகவை சில விஷயங்களை மையப்படுத்தித் தங்களது அடிமையாக மாற்றி வைத்துள்ளது என்று கூற வேண்டும். அதுவும் நட்பாகக் கூட அல்ல, மிரட்டல் மூலமாக. அதிமுகவை அழித்தொழிக்கும் வேலையையும் பாஜக தற்போது செய்து கொண்டிருக்கிறது. தமிழக மக்களுக்கும் அழிவு வேலைகள் பலவற்றைச் செய்யும் இந்தக் கூட்டணி ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்பதில் பேரவை கண்ணும் கருத்துமாக இருக்கிறது. அதிமுகவினர் கொடியில் அறிஞர் அண்ணாவை வைத்துள்ளனர். ஆனால் அதற்கு நேர் எதிராக இப்போது இயங்கிக் கொண்டுள்ளனர்.



தமிழக மக்களின் வேலைவாய்ப்பைக் குறிவைத்து அவற்றை அழிப்பதில் குறியாக இருக்கிறார்கள் இருவரும். இந்திய சராசரியை விட தமிழகத்தில் கல்வி நிலை முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தியாவின் மற்ற மாநிலங்களை விடத் தமிழகம் கல்வி, மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் முன்னேறி உள்ளது. இது அவர்களுடைய கண்களை உறுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே இவற்றை நீட் தேர்வு, புதிய கல்விக்கொள்கை, இந்தித்திணிப்பு, சமஸ்கிருதத்துக்கு அதிக நிதி ஒதுக்குவது போன்ற வேலைகளைச் செய்வதன் மூலம் அழித்தொழிக்கும் வேலையைச் செய்து வருகிறார்கள். தமிழக மக்களுக்காகத் தொலைநோக்கோடு எந்தத் திட்டத்தைப் பாஜக கொண்டு வந்துள்ளது? அதிமுகவின் ஒரே திட்டம் மக்கள் பணத்தைக் கொள்ளையடிப்பது. கொரோனா காலத்தில் வழங்கப்பட்ட அத்தனை உதவிகளிலும் பெருமளவு சுரண்டல் நடந்துள்ளது. மக்கள் நலனுக்கான திட்டங்கள் எதுவுமே கிடையாது இந்தக் கூட்டணியிடம். தமிழக மக்களின் எதிரிகள், துரோகிகள் இவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

**பாஜக மாநிலத் தலைமையை ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கியதை வெறும் வாக்கரசியலோடு மட்டுமே சுருக்கிப் பார்க்க வேண்டுமா?**

இதில் வாக்கரசியல் மட்டும்தான் இருக்கிறது. தமிழகத்தின் மேற்குப் பகுதியில் வாழும் மக்களின் வாக்கு ஒரு தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது. குறிப்பாக அருந்ததிய மக்களின் வாக்குகள். இவர்கள் யாருக்கு வாக்களிக்கிறார்களோ அவர்கள்தான் தமிழக அரசை ஆளமுடியும். புள்ளிவிவரங்கள் அதைத்தான் சொல்கின்றன. இவர்களை இன்னும் கூடுதலாக அரவணைத்துச் சென்றிருந்தால் திமுகதான் இன்று ஆளும் கட்சி. அதை இழந்ததால்தான் அதிமுக இன்று வந்துவிட்டது. இந்த அரசியலைத் தெரிந்துகொண்டு அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவரைத் தலைமைப்பதவிக்குக் கொண்டுவரலாம் என்று நினைக்கிறது பாஜக.

பாஜக மாநிலத் தலைவர் முருகன் அடிப்படையில் ஒரு ஆர்எஸ்எஸ்காரர். அதனால்தான் அவருக்குப் பாஜக அந்தப் பதவியை வழங்கி இருக்கிறது. அதை முதலில் மக்களிடம் நாம் வெளிப்படுத்த வேண்டும்.

அவர் ஏற்கனவே தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தின் துணைத் தலைவராக இருந்தவர். அந்தப் பதவியில் இருந்து கொண்டே மக்களுக்கு இவர் என்ன செய்தார்? நாட்டில் தாழ்த்தப்பட்டோருக்கு நடக்கும் வன்கொடுமைகளுக்கு ஏதாவது தீர்வு கண்டு இருக்கிறாரா என்பது நாம் எழுப்ப வேண்டிய முக்கியமான கேள்வி.

**வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலில் திமுகவை ஆதித்தமிழர் பேரவை ஆதரிப்பதற்கான காரணம் என்ன?**

திமுகவை ஆதித்தமிழர் பேரவை இப்போது மட்டுமல்ல, எப்போதும் ஆதரித்தே வந்துள்ளது. திராவிட இயக்கம் என்று சொன்னாலே இன்றைய நிலையில் அதனுடைய பிரதிநிதி திமுக மட்டும்தான். அதை முறியடிப்பதற்காகத்தான் திமுக மீது ஊழல் குற்றச்சாட்டு சொல்வதும், குடும்ப அரசியல், கழகங்கள் அல்லாத தமிழகம் என்று சொல்வதும். இது பார்ப்பன ஆர்எஸ்எஸின் அஜெண்டா.

கலைஞர் மக்களுக்காக என்ன செய்திருக்கிறார் என்பதைப் பட்டியலிட்டோம் என்றால் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் எந்த முதல்வரும் இதைச் செய்திருக்க முடியாது. இந்தியாவின் மற்ற மாநிலங்களுடன் அல்ல, ஐரோப்பிய நாடுகளுடன்தான் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒப்பிட வேண்டும் என்று நோபல் பரிசு பெற்ற அமர்த்திய சென் குறிப்பிடுகிறார். இதற்குக் காரணம் திமுக.

கலைஞருடைய சாதனை என்பது சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டது. சமூகத்தில் கீழே உள்ள ஒருவனை மேலே கொண்டு வருவது. அதில் ஒன்றுதான் அருந்ததியர் உள் ஒதுக்கீடு. அதுமட்டுமன்று கொங்கு வேளாளர் சமூகத்தைப் பிற்படுத்தப்பட்டவர்களாக அறிவித்தது, அவர்களுக்கு மிகப்பெரிய வளர்ச்சியைக் கொடுத்தது. வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடும் அவ்வாறே. இதைச் செய்தது கலைஞர்தான்.

அருந்ததியர் உள் ஒதுக்கீட்டைத் தனது வாழ்க்கையின் மிகப்பெரிய சாதனையாக ஒருமுறை தன்னுடைய பேட்டியில் குறிப்பிட்டார். இதைச் செய்தபோது அவர் மருத்துவமனையில் இருந்தார் என்பதும், சட்டப்பேரவையில் இதைக் கொண்டு வந்து நிறைவேற்றியது இன்றைய திமுக தலைவர் தளபதி அவர்கள்தான் என்பதும் நாம் நினைவுகூரத்தக்க செய்திகள்.

இதை மக்களிடம் கொண்டு சென்று அருந்ததிய மக்களை அதிமுக மனநிலையிலிருந்து திமுக மனநிலைக்கு மாற்றியது ஆதித்தமிழர் பேரவையின் குறிப்பிடத்தகுந்த சாதனை. இதனை நான் மிகவும் பெருமையாக நினைக்கிறேன்.

**திமுக வெற்றி பெறும் சூழலில் ஆதித்தமிழர் பேரவை சார்பாகத் திமுகவிற்கு வைக்கப்படும் கோரிக்கைகள் என்ன?**

அருந்ததியருக்கு உள் ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. இந்த விழுக்காட்டை 6 சதவீதமாக உயர்த்த வேண்டும்.

ஆதிதிராவிடர் நலத்துறையானது சமூக நீதித்துறை என்று பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பும், ஒன்றிய அரசின் சட்டமும் கையால் மலம் அள்ளும் தொழிலை ஒழித்து விட்டன. அந்த மக்கள் இந்தத் தொழிலிலேயே இருக்கக் கூடாது என்று ஆதித் தமிழர் பேரவை விரும்புகிறது.

இந்தப் பணிகளை முழுவதும் இயந்திரமயமாக்க வேண்டும். அந்த மக்களுக்கு மாற்றுப்பணி வழங்க வேண்டும். துப்புரவுப் பணியை ஒரு குறிப்பிட்ட சமூகம் செய்வதாக இருக்கக் கூடாது. இதை ஆராய்ந்து பரிசீலனை செய்து அரசுக்கு ஆலோசனை வழங்க ஓர் ஆணையம் அமைக்கப்பட வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் இடைநிற்றல் (dropouts) என்பது அருந்ததிய மக்களிடையே அதிகமாக உள்ளது. இலவசக் கட்டாயக் கல்வி என்பது சட்டமாக உள்ளதே தவிர நடைமுறையில் இல்லை. இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்கவும் ஓர் ஆணையம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**தந்தை பெரியாரைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானவராகக் கட்டமைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்த உங்களது விமர்சனம் என்ன?**

ஆர்எஸ்எஸ்ஐச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு உடன் போகிறவர்கள் ஆகியோர்தான் தந்தை பெரியாரைத் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக நிறுத்துகிறார்கள். பெரியாரை எதிர்க்கும் போலித் தமிழ்த்தேசியவாதிகளும் இறுதியில் பார்ப்பனியத்திற்குத்தான் வந்து சேர்வார்கள்.

தந்தை பெரியார் யாரையும் பிரித்துப் பார்க்கவே இல்லை. அவர், ஒட்டுமொத்தமாகப் பார்ப்பனர்களால் நாம் வஞ்சிக்கப்பட்டு இருக்கிறோம், சுரண்டப்பட்டு இருக்கிறோம் என்றுதான் பார்த்தார்.

உலகம் முழுவதும் நாத்திகம் பேசிய பல தலைவர்கள் இருந்தார்கள். ஆனால் தந்தை பெரியார் மட்டும்தான் அதை மக்களின் முன்னேற்றத்துடன் இணைத்துப் பேசினார்.

தலித் மக்கள் இன்று படிக்கவும், கலைஞர் கொண்டு வந்த உள்ஒதுக்கீடு மூலமாக மருத்துவர், பொறியாளர்களாக ஆவதற்கும் தந்தை பெரியார் போட்ட விதைதானே காரணம்! இதை வேறு யாராவது செய்தார்களா?

அவர் 1929இல் செங்கல்பட்டு மாநாட்டில் போட்ட தீர்மானங்கள்தானே இன்று நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கின்றன. சாதிப்பெயரை நீக்குவதிலிருந்து பெண்களுக்குச் சொத்துரிமை வரை அவர் போட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தினாலே போதும், புதிதாக நாம் எதுவும் சிந்திக்க வேண்டியதில்லை. அந்த எல்லை வரைக்கும் சிந்தித்தவர் தந்தை பெரியார்.

தந்தை பெரியாரைப் பற்றி ஆராய்ச்சி செய்தால் ஆயிரம் பிஎச்டி வாங்கலாம். உலகப் பல்கலைக்கழகங்கள் அத்தனையிலும் அவருக்கான ஆய்வு இருக்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இன்னும் ஒரு நூறு ஆண்டுகளுக்கு அவரை ஆழமாகக் கொண்டு செல்ல வேண்டிய தேவை இருக்கிறது. அப்படிக் கொண்டு போனால் மட்டும்தான் மனித குலம் முன்னேற முடியும். சில முட்டாள்கள்தான் அப்படிப் பேசுவார்கள். அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

– நேர்காணல் : **வெற்றிச் செல்வன்** ●

**கருஞ்சட்டைப் பதிப்பகம் சார்பாகக் கீழ்க்காணும் நான்கு நூல்களும் வெளியிடப்பட உள்ளன. நூல்களைப் பெற 9940407468 எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.**













Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,